# விபஸ்ஸனா செய்தி மடல்

மலர்-3, இதழ்-1, அக்டோபர் - 2009 | ஒரு மடலின் விலை-ரூ 2.50 | விபஸ்ஸனா தியான மையம்
தமிழ் மாதப் பத்திரிகை | ஆண்டு சந்தா-ரூ 30 | தம்ம சேது, சென்னை, தமிழ்நாடு


**[விபஸ்ஸனா: ஸயாஜி ஊபாகின் வழிமரபில், திரு சத்திய நாராயண கோயங்கா அவர்களால் போதிக்கப்படும் தியான முறை]**

## தம்ம வாக்கு

**ஸப்ப தானங் தம்ம தானங் ஜினாதி, ஸப்ப ரஸங் தம்ம ரஸோ ஜினாதி;**
**ஸப்ப ரதிங் தம்ம ரதி ஜினாதி, தண்ஹக்கயோ ஸப்ப துக்கங் ஜினாதி.**

தம்மத்தின் தானம் அனைத்து தானங்களையும் வெல்லக்கூடியது, தம்மத்தின் சுவை அனைத்து சுவைகளையும் வெல்லக்கூடியது; தம்மத்தின் மகிழ்ச்சி அனைத்து இன்பங்களையும் வெல்லக்கூடியது, விருப்பின் (ஆசையின்) அழிவு அனைத்து துன்பங்களையும் வெல்லக்கூடியது.

தம்மபதம் - 24, 21(354)

# அநாதபிண்டிகர்

**திரு. சத்ய நாராயண கோயங்கா**

தன் மாமனார் வீட்டிற்கு ஸாவத்தியிலிருந்து இராஜகிரி வந்த அநாதபிண்டிகர், உலகில் புத்தர் தோன்றியுள்ளார், அவர் நாளை தனது மைத்துனர் வீட்டிற்கு உணவு அருந்துவதற்காக வரவுள்ளார் என்பதைக் கேள்விபட்டதும் பகவான் புத்தரை காண வேண்டும் என்ற பேராவல் அவருள் எழுந்தது. அடுத்த நாள் அவர் விடியலுக்கு முன்பே கிளம்பி நகரத்திற்கு வெளியே பகவான் வசித்து வந்த குளுமை நிறைந்த வனப்பகுதிக்குச் சென்றடைந்தார்.
“வா, ஸுதத்தா!” என்று பகவான் அவரது இயற்பெயர் கொண்டு அழைத்தார்.
பகவான் என்னுடைய இயற்பெயர் கொண்டு என்னை அழைக்கின்றார். இதனாலேயே அவர் மகிழ்ச்சிப் பரவசத்தில் ஆழ்ந்து போனார். பகவான் அநாதபிண்டிகருக்கு தர்ம பேருரை வழங்கினார். அதைக் கேட்டு அவரது மனம் சாந்தமும், பெறும் மகிழ்ச்சியும், தூய்மையும் அடைந்தது.
தனது முந்தைய புண்ணிய பாரமீயின்(குணங்களின்) காரணமாக பகவானின் வார்த்தைகளை கேட்டுக்கொண்டிருக்க அவருள்ளே அநித்ய ஞானம் உதித்து, சாமான்ய மனிதரான புதுஜ்ஜன் என்ற நிலையிலிருந்து ஸோதாபன்னராகி (புனிதராகி) விட்டார். பக்தி பரவசமடைந்து அவர் பகவானை மறுநாள் உணவுக்காக வரவேற்பு விடுத்தார். மௌனத்தின் வாயிலாக பகவான் அதனை ஏற்றுக்கொண்டார்.
மறுநாள், உணவை உட்கொண்ட பிறகு, பகவான் தர்ம போதனையொன்றை அருளினார். அப்பொழுது, அநாதபிண்டிகர் பகவானிடம் இருகைக்கூப்பி மிகுந்த மரியாதையுடன் - “ஐயனே, பகவானே, பிக்ஷு ஸங்கத்துடன் அடுத்த மழைக்கால வாசத்தை ஸ்ராவஸ்தியில் கழிக்குமாறு ஏற்றுக்கொள்ளுங்கள்.” என்று வேண்டுகோள் ஒன்றை விடுத்தார்.
“இல்லறத்தாரே, ததாகதர்(புத்தர்) தனிமையில், ஏகாந்தத்தில் வசிப்பதை விரும்புவர்.” என்று பகவான் அந்த வேண்டுகோளை ஏற்றுக்கொண்டு கூறினார்.
“புரிந்துகொண்டேன் பகவானே, அறிந்து கொண்டேன் மகிழ்ச்சிமிக்கவரே!” என்று அநாதபிண்டிகர் மலர்ந்த முகத்தோடு கூறலானார்.
பிறகு, ஸ்ராவஸ்தி சென்று பகவான் வசிப்பதற்கு தகுதியான இடத்தை தேடுவதில் ஈடுபட்டார். இடம் நகரத்திற்கு மிக தொலைவிலும் இல்லாமல் மிக அருகிலும் இல்லாமல் இருக்க வேண்டும். அவ்விடத்தில் மக்கள் வருவதற்கான வாய்ப்பு வசதிகள் இருக்க வேண்டும். பகலில் மக்கள் கூட்டமும், இரவில் அதிக கூச்சலும் இல்லாத இடமாக இருக்க வேண்டும். தியானத்திற்கு உகந்ததோர் இடமாக இருக்க வேண்டும்.
தேடிக் கொண்டிருக்கும் போது, அவருக்கு ஜேத இளவரசரின் பூங்கா உகந்ததாக புலப்பட்டது. இதை வாங்குவதற்காக அவர் ஜேத இளவரசரிடம் சென்றார். இளவரசர் தனது பூங்காவை விற்க விரும்பவில்லை. விற்பனையை தவிர்பதற்காக, அதன் விலையை ‘கோடி-ஸந்தர்’ என்று கூறிவிடுகிறார்.
அநாதபிண்டிகர் இளவரசர் கூறிய விலையை ஏற்றுக்கொண்டு இந்த பேரத்தை முடித்தார். ’கோடி-ஸந்தர்’ என்றால் கோடிகளின் இறைப்பு என்று பொருள். அதாவது நிலம் முழுவதிலும், ஒரு எல்லையிலிருந்து இன்னொரு எல்லை வரை, தங்க நாணயங்களை இறைக்க வேண்டும். அநாதபிண்டிகர் இதைத் தான் செய்தார். வண்டி-வண்டியாக தங்க நாணயங்களை நிரப்பி, அதை நிலத்தில் இறைக்க தொடங்கினார்.
பகவான் புத்தர் மக்களுக்கு தம்மத்தைக் கற்பிக்க போகும் இடத்திற்கு, அந்த தவபூமிக்கு எந்தவொரு விலையும் ஒப்பீடற்றது. அவர் மிகுந்த மன நிறைவோடு ஜேதவன

நிலத்தை தங்க நாணயங்களினால் நிரப்பிக்கொண்டே இருந்தார்.
இதையெல்லாம் கண்ட இளவரசர் திகைத்துப் போனார். நிலத்தின் ஒரே ஒரு பகுதி மட்டுமே தங்கங்களால் நிரப்பப்படாமல் இருந்தது. அநாதபிண்டிகர் மேலும் தங்க நாணயங்களை வண்டியிலிருந்து கொண்டுவருமாறு உத்தரவிட்டார். ஆனால், ஜேத இளவரசர் அவரது கையை பிடித்து - “நிறுத்துங்கள், இல்லறத்தாரே! இந்த காலியான இடத்தில் தங்கத்தை இறைக்காதீர். இதை எனக்கு விட்டுவிடுங்கள், இது என்னுடைய நன்கொடையாக இருக்கட்டும்.” என்று கூறினார். அநாதபிண்டிகர் அதனை ஏற்றுக்கொண்டார்.

(சூளவக்கபாலி 304-307, அநாதபிண்டிகவத்து)

அநாதபிண்டிகர் அந்த மதிப்புமிக்க நிலத்தில் இருப்பிடங்கள், தியானத்திற்கான தனியறைகள் மற்றும் பெரிய அறைகளை(கூட்டறை) அமைத்தார்; மேலும், நீரை வெப்பப்படுத்த கொதி கலங்களை அமைத்தார், பண்டகசாலை, திறந்தவெளி நடைபாதைகள், நீர்தேக்கத் தொட்டி, குளம் மற்றும் குளியல் அறை ஆகியனவற்றை அமைத்தார்; மேலும் பகவானின் நேரடி கண்காணிப்பில் ஆயிரக்கணக்கான துறவியர்களும் தியான ஸாதகர்களும் வசதியாக இருந்து கொண்டு தியானம் செய்வதற்காக பொது மண்டபத்தையும் உருவாக்கினார். பகவானின் இந்த பக்தி நிறைந்த இல்லற சீடர், தானத்தின் வரலாற்றில் ஒரு இணையற்ற, பிரகாசமான இடத்தை உருவாக்கினார். பகவான் இவருக்கு நன்கொடை வழங்குவோர்களின் வரிசையில் முதன்மையானவர் என்ற சான்றிதழை அளித்தார்.

# படாசாரா

ஸ்ராவஸ்தி நகரத்தின் ஒரு பெரும் பணக்கார வியாபார குடும்பம். குடும்ப தலைவர், அவர் மனைவி, ஒரு இளம் மகன் மற்றும் மகள் என்று வெறும் நான்கு உறுபினர்கள், ஏழு மாடி கொண்ட பெரிய மாளிகையில் வசித்து வந்தார். இளம் மகளின் உதிவிக்காக ஒரு இளம் வேலைக்காரனை நியமித்திருந்தனர். அவன் மீதுள்ள கவர்ச்சியினால் அந்த இளம் பெண் சிக்கிவிட்டாள். அவளது திருமணம் வேறெங்கும் நடந்துவிடக்கூடாது என்பதற்காக அதற்கு முன்னரே, இருவரும், எவ்வளவு எடுத்துக்கொள்ள முடியுமோ அவ்வளவு பணத்தையும், நகைகளையும் எடுத்துக் கொண்டு வீட்டைவிட்டு ஓடினர். நகரத்தின் தொலைவிலுள்ள ஒரு சிறிய கிராமத்தில் குடிசென்றனர்.

எடுத்துக்கொண்டு வந்த செல்வங்கள் அதிக நாள் நீடிக்கவில்லை. மிகவும் ஏழ்மை நிலையில் நாட்களை கடத்தினர். இரண்டு வருடங்களுக்குப் பிறகு அவள் கருவுற்றாள். அவளுக்கு இரண்டு மகன்கள் பிறந்தார்கள். ஆனால், தற்செயலாக இருவரும் ஒரு விபத்தில் பலியானார்கள். கணவரை கூட கறுப்பு நாகம் ஒன்று கடித்துவிட்டது. அந்த துன்பம் நிறைந்த, அந்த துரதிஷ்ட மங்கை அழுதுகொண்டும் கதறிக்கொண்டும் தனியாக ஸ்ராவஸ்தியை நோக்கி வந்துகொண்டிருந்தாள். ஸ்ராவஸ்தியை அடைவதற்கு முன்னரே தந்தையின் ஏழுமாடி கொண்ட மாளிகை இரவில் ஏற்பட்ட சூறாவளிக் காற்றில் தகர்ந்து விட்டது என்பதை இடுகாட்டிலேயே தெரிந்துகொண்டாள். அந்த நிகழ்வில் தந்தை, தாய் மற்றும் சகோதரர் ஆகிய மூவரும் நொறுங்கி இறந்து விட்டிருந்தார். உலகத்தில் இனி அவளுக்கு எவரும் இல்லை. அவள் முழுமையாக பைத்தியமானாள். தன் உடலில் ஆடையின்றி ஸ்ராவஸ்தியின் சாலைகளிலும் சந்துகளிலும் சுற்றிக்கொண்டிருந்தாள்(உலாவலானாள்).

இம்மாதிரியான துன்பகரமான நிலையில் அவளது முன் செய்த புண்ணியத்தினால் ஒரு நாள் ஜேதவன விஹாரத்தின் வழியே சென்றுகொண்டிருந்தாள். அங்கு பகவான் புத்தர் மக்களுக்கு தம்மத்தை விளக்கி கொண்டிருந்தார். துன்பத்தில் இருந்த அவள் பகவானுக்கு அருகில் வந்தாள். கருணை நிறைந்த வார்த்தைகளில், “என்னுடைய துன்புறும் மகளே! சுயநினைவுக்குத் திரும்பு!” என்று பகவான் கூறினார். வாக்கில் அமுதம் நிறைந்திருந்தது. கேட்டதும், அந்த துன்புறும் பெண்ணிற்கு சிறிது சுயநினைவு திரும்பியது. அவளது கவனம் தமது ஆடையற்ற உடலின் மேல் சென்றதும், அவமானத்தில் ஒடுங்கிவிட்டாள். அங்கேயே அமர்ந்தாள். அருகிலிருந்த ஒரு சகோதரர் தனது போர்வையை அவளிடம் அளித்தார். அவள் உடனே அந்த போர்வையைப் போர்த்திக்கொண்டாள். அப்போதிலிருந்து அந்த போர்வை போர்த்திய துயருற்ற பெண்ணின் பெயர் ‘படாசாரா’(போர்வையை போர்த்திக்கொண்டவள்) என்று ஆகிவிட்டது.

- “வணக்கத்திற்குரிய பகவானே! நான் மிகுந்த துயரத்தில் உள்ளேன். எனக்கு தஞ்சமளியுங்கள்.”

பகவான் ஊக்கமளித்தார் - “மகளே, விழித்தெழு! தம்மத்தை பயிற்சி செய். தம்மம் உனக்கு சரியான தஞ்சமளிக்கும்.”

பகவானின் குறலிலிருந்து கருணை பொங்கியது. அதை கேட்க கேட்க மனம் ஒருநிலையடைந்தது. சிறிது நேரம் உள்நோக்கிப் பார்த்தாள். உள்ளே விபஸ்ஸனா உதிக்கத் தொடங்கியது. பழைய புண்ணியங்களின் (பாரமிதாகள்) பலனாக அங்கேயே அவ்விடத்தில் உட்கார்ந்திருக்கும் போதே அவள் ஸோதாபன்னர் நிலையை அடைந்தார். பகவான் அவருக்குத் துறவறத்தை அளித்தார். விடுதலையின் பாதையில் அவர் உறுதியுடன் முன்னேறினார்.

ஒரு நாள் அவர் குடுவை நிறைந்த தண்ணீரினால் தனது கால்களை கழுவினார். பாய்ந்த நீர் சிறிது தூரம் வரை சென்று காய்ந்து போனது. காலில் குடுவை நிறைந்த நீரை மீண்டும் ஊற்றினார். நீரின் ஓட்டம் இன்னும் சிறிது அதிக தூரம் சென்று காய்ந்து போனது. மூன்றாவது முறை மீண்டும் நீரை ஊற்றியபோது இன்னும் அதிக தூரம் சென்று வற்றிப்போனது.

இந்த சிறு நிகழ்வு ஆழத்திலுள்ள ஞான வித்துக்களை தட்டி மேலெழுப்பியது. நீரின் ஓட்டத்தைப் போல் தான் வாழ்க்கையின் ஓட்டமும். இந்த உலகில், வாழ்க்கையோட்டம் சிலருக்கு குறுகிய காலம் வரையிலும்,

சிலருக்கு நடுவயது வரையிலும், சிலரக்கு அதிக காலம் வரையிலும் நீடிக்கிறது. ஆனால், அனைவரும் இறக்கத்தான் செய்கின்றார்கள். இந்த மரணானுஸ்ஸதி அதாவது மரண சிந்தனையின் அடிப்படையில் விபஸ்ஸனா பயிற்சி செய்யத் தொடங்கியதும் விரைவிலேயே ஸோதாபன்ன நிலையிலிருந்து ஸகதாகாமீ, அநாகாமீ மற்றும் அரஹந்த நிலையை அவர் ஒன்றன்பின் ஒன்றாக அடைந்தார். இந்த மனித பிறப்பு முழுமையடைந்தது; பயனுள்ளதாகியது; துன்பங்களிலிருந்து முழுமையாக விடுதலை பெற்றார்.

அவரது மீதமுள்ள வாழ்நாள் முழுவதும் துன்புறும் பெண்களை தர்மத்தின் பாதையில் நிலைபெறச் செய்து துன்பத்திலிருந்து விடுதலை அடைய செய்வதில் கழித்தார். படாசாரா விபஸ்ஸனாவைப் பெற்றும், விபஸ்ஸனா படாசாரா போன்ற புனிதரைப் பெற்றும் பாக்கியமடைந்தன. பகவான் படாசாராவை துறவி வினயத்தை (துறவிகளின் ஒழுக்க நெறிமுறைகள்) கடைப்பிடிப்பதில் முதன்மையானவர் என்ற சான்றிதழை சூட்டினார்.

## கேள்வி பதில்

**1.** விபஸ்ஸனா தவிர மற்ற பாதைகளின் மூலம் முக்தி அடைய முடியுமா?

நீங்கள் எந்த பெயரில் வேண்டுமானாலும் அழைக்கலாம். விபஸ்ஸனா என்ற பெயர் கொடுக்காமலேயே சிலர் முக்தி அடைந்துள்ளனர். ஆனால், அவர்கள் என்ன செய்தார்கள் என்று நாம் ஆழத்தில் சென்று பார்ப்போமானால். அவர்கள் விபஸ்ஸனாவையே பயிற்சி செய்து வந்தார்கள் என்று தெரிய வருகிறது. விபஸ்ஸனா என்ற பெயர் தெரியாத காரணத்தினாலே அவர்கள் விபஸ்ஸனா என்று அதனை அழைக்கவில்லை. உங்களை நீங்கள் ஆராய்ந்து மனவழுக்குகளை எடுக்காத வரையில், நீங்கள் முக்தியடைய முடியாது. உங்களை நீங்கள் ஆராய்ந்து கொண்டு மன மாசுகளை எடுப்பீர்களானால், அதுவே விபஸ்ஸனா. நீங்கள் அதனை விபஸ்ஸனா என்றோ அல்லது வேறொரு பெயரிலோ அழைத்தாலும் அதில் வேறுபாடு ஏதுமில்லை.

2. நாம் நமது அகந்தையை தவிர்த்து அதனை உள்ளே அழுத்த வேண்டுமா அல்லது அதனை அப்படியே விட்டுவிட வேண்டுமா?

ஒருபோதும் அதனை அழுத்தாதீர்கள். நீங்கள் பயிற்சி செய்வீர்களானால் இயல்பாகவே அது கரைந்து விடும். அகந்தையை நீங்கள் வெளியேயும் தள்ள முடியாது உள்ளேயும் அழுத்த முடியாது. அவ்வாறு செய்யும் போது அது பெருகிக் கொண்டே செல்லும். இயல்பாக என்ன நிகழ வேண்டுமோ அது நிகழட்டும். இந்த பயிற்சி உங்களுக்கு உதவும். தம்மம் உங்களுக்கு உதவும்.

3. ஒருவருடைய பெற்றோர்கள் இறந்து போயிருந்தால், அவர்களுக்கு ஏதாவது செய்ய முடியுமா?

ஆம், நீங்கள் அவர்களுக்கு உதவ முடியும். உங்களது தியானத்தின் முடிவில் அவர்களை ஞாபகப்படுத்தி “நான் என்னவெல்லாம் புண்ணியங்களை பெற்றிருக்கிறேனோ அவைகளை நீங்கள் பகிர்ந்துகொள்ளுங்கள். நீங்களும் அமைதியையும் மகிழ்ச்சியையும் உணர்வீர்களாக” என்று உங்களுடைய புண்ணியங்களை பகிர்ந்துகொள்ளுங்கள். இவ்வாறு நீங்கள் உங்களது மெத்தாவை அனுப்பலாம். எங்கிருந்தாலும் அவர்களை இந்த அதிர்வலைகள் சென்றடையும். இந்த அதிர்வலைகள் பல அற்புதங்களை செய்யும் என்று நீங்கள் எண்ணி விடக்கூடாது, ஆனால், அவர்களை இது தம்மத்தின் பால் கவரும். அவர்களுக்கு இந்த வழியும் கிடைக்கலாம். இதை மட்டும் தான் நீங்கள் செய்ய இயலும். உங்கள் புண்ணியங்களை பகிர்ந்துகொள்ளுங்கள்.

4. உள்ளச் சமநிலை நிலையானதா அல்லது நிலையற்றதா?

இதுவும் நிலையற்றது தான். ஏனெனில் நீங்கள் மீண்டும் மீண்டும் உங்கள் சமநிலையை இழந்து கொண்டு தான் இருக்கிறீர்கள், அல்லவா? முடிந்த அளவுக்கு சமநிலையுடன் இருக்க முயலுங்கள். இறுதியில் எல்லா ஸங்காரங்களும் நீங்கி முழு முக்தி நிலையை நீங்கள் அடைவீர்கள். அந்த நேரத்தில் என்ன நிகழும் என்பதை நீங்கள் அனுபவித்து பாருங்கள் - அதற்கு பின் நீங்கள் கேள்வியுடன் என்னிடம் வரமாட்டீர்கள்.

## பாலி மொழி வகுப்பு – 13

பஞ்ச கந்த - ஐந்து வகையான கூட்டுப்பொருட்கள்

ரூப - உடல், அட்டகலாபங்கள்(எட்டு நுண்ணனுத்துகள்களின் குவியல்), விஞ்ஞான - அறிதல், சஞ்ஞா - தெரிந்து கொள்ளுதல், மதிப்பிடுதல், வேதனா - உணர்ச்சி, ஸங்காரா - மனதின் எதிர்வினை, வினைப்பயன்

பஞ்ச நீவரண - ஐந்து தடைகள், திரைகள்

காமச் சந்த - புலன் சார்ந்த இன்ப வேட்கை, 2. வியாபாத - வெறுப்பு, 3. தின-மித்த - சோம்பல், 4. உத்தச்ச-குக்குச்ச - அமைதியின்மை, மனக்குளச்சல், 5. விசிகிச்ச - சந்தேகம்

**RNI TC NO: TNTAM 17399 / 26.03.07 RDIS NO: 126/07**
**REGISTRAR OF NEWSPAPERS FOR INDIA No. TNTAM/2007/22647 POSTAL REG NO: TN/CH©/140/08-10**

## விபஸ்ஸனா தியான முகாம் கால அட்டவனை - 2010

விபஸ்ஸனா தியான மையம், தம்ம சேது, 533, பழந்தண்டலம் ரோடு, வழி: திருநீர்மலை, திருமுடிவாக்கம்-அஞ்சல், சென்னை - 600044, தொலைபேசி: 044-24780953

| மாதம் | 10-நாள் | ஸதிபட்டான | சிறப்பு பத்து நாள் | 20-நாள் | 30-நாள் | 3-நாள் | குழந்தைகள் முகாம் | தம்ம சேவகர்களுக்கான பயிற்சி வகுப்பு |
|---|---|---|---|---|---|---|---|---|
| ஜனவரி | 2-13<br>20-31 | | | | | 14-17 | 31st | |
| பிப்ரவரி | 18-1(Mar) | 6-14 | | | | 3-6 | | 14th |
| மார்ச் | | | 25-5 | 5-26 | 5-5 | | | |
| ஏப்ரல் | 8-19<br>22-3(மே) | | | | | 8-11 | | |
| மே | 19-30 | | | | | 6-9 | 10th<br>15-16<br>30th | 9th |
| ஜூன் | 3-14 | 19-27 | | | | 3-6<br>16-19 | | |
| ஜூலை | 1-12<br>21-1(Aug) | | | | | 1-4<br>15-18 | 18th | |
| ஆகஸ்ட் | 5-16<br>19-30 | | | | | 5-8<br>19-22 | 1st | 15th |
| செப்டம்பர் | 2-13<br>30-11(Oct) | 18-26 | | | | 2-5 | 26th | |
| அக்டோபர் | 14-25 | | | 31-21(Nov) | 31-1(Dec) | 14-17 | | |
| நவம்பர் | | | 20-1(Dec) | | | | | |
| டிசம்பர் | 2-13<br>16-27 | | | | | 2-5 | 30-31 | 13th |

## விபஸ்ஸனா தியான முகாம் கால அட்டவனை - 2009

| | 10 நாள் | ஸதி-பட்டான முகாம் | 3-நாள் | குழந்தைகள் முகாம் |
|---|---|---|---|---|
| **அக்டோபர்** | 21-01 | 8-16 | 22-25 | - |
| **நவம்பர்** | 4-15, 18-29 | - | - | 1(நவம்பர்) |
| **டிசம்பர்** | 2-13, 16-27 | - | - | 27-28 |

**சந்தா-காலம் நிறைவு பெற்றவர்களுக்கு ஓர் வேண்டுகோள்:** தங்களது சந்தா காலத்தை மேலும் ஒரு வருடத்திற்கு நீட்டிக்க விரும்புபவர்கள், தங்கள் ஆண்டுச் சந்தாவை கீழே குறிப்பிட்டுள்ள விலாசத்தில் பணவிடை(MO) மூலமாக செலுத்தலாம். **முகவரி:** விபஸ்ஸனா செய்தி மடல், c/o: திரு. வீ. சந்தானகோபாலன், T2, அக்ஷயா ஃபளாட்ஸ், 55 - இருசப்ப தெரு, திருவல்லிகேனி, சென்னை எ 600005

Published by V. Santhanagopalan on behalf of Vipassana Meditation Centre, from Flat No. T2, Akshaya Flats, 55 Irusappa Street, Triplicane, Chennai 600005 and printed by R. N. Yogi at Leeyo Graphiks, New No. 6, Gaffur Street, Royapettah, Chennai 600014. Editor: V. Santhanagopalan

REGISTERED NEWSPAPER

Posted on: 12/10/2009
POSTED AT EGMORE
RMS/1 (PATRIKA CHANNEL)

*அனுப்புநர்*: Vipassana Meditation Centre
T2, Akshaya Flats, 55 Irusappa Street, Triplicane, Chennai 600005 ☏: 044-24780953
e-mail: info@setu.dhamma.org,
Website: www.vridhamma.org, www.setu.dhamma.org, www.tamil.dhamma.org